ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2488/69 - 2026 මැයි මස 17 වැනි ඉරිදා - 2026.05.17
*2488/69 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)

1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட (235 ஆம் அதிகாரம்) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10அ பிரிவின் மூலம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள அதிகாரங்களின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், 2026, மே மாதம் 15 ஆம் திகதி மற்றும் 2488/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள கட்டளையின் இறுதியில் வரும் பந்திக்குப் பின்னர் கீழ்வரும் பந்தியினை உள்ளடக்கி 2026, மே மாதம் 18 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

2026, மே மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கடனுறுதிக் கடிதங்கள் திறந்து வைக்கப்பட்ட, எனினும் குறித்த தினத்திற்குப் பின்னர் உரிய கடனுறுதிக் கடிதங்கள்/ கடிதத்தில்,

(அ) வாகனங்களின் எண்ணிக்கை,
(ஆ) வாகனத்தை அடையாளம் காணும் இலக்கம்,
(இ) வாகனத்தின் விபரம்,
(ஈ) வாகனத்தின் தொழிநுட்ப விவரக்குறிப்புக்கள், ஆகிய மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் ஒன்றோ அல்லது பலவற்றையோ திருத்தம் செய்தல் மேற்கொள்ளப்பட்டு இருப்பின், 2026, மே மாதம் 15 ஆந் திகதிய மற்றும் 2488/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள மிகைவிதிப்பினை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும் என்பதனை இத்தால் கட்டளையிடுகின்றேன்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2026, மே 17.

EOG 05- 0197

1A - PG 7710 — 428 (2024/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*